**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண். 209/2023**

பெயர் - ரேவதி (PW1) (Cross )

த/க/பெ. :

தேதி :14.03.2025

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**<u>பிரதி வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

தாவா சொத்து தரங்கம்பாடி தாலுக்கா காட்டுச்சேரியில் உள்ளது. தாவா சொத்துக்கள் திருவாரூர் மாவட்டம் அருள்மிகு சௌரிராஜ பெருமாள் கோவிலுக்கு சொந்தமானது. என் பிரமாண வாக்குமூலத்தில் என் மாமனாருக்கு பாகரிவினை மூலம்கிடைத்தாக சொல்லி உள்ளேன். பாகபிரிவினை எந்த தேதியில்ஏற்பட்டது என்பது நினைவில்லை. பாகபிரிவினை பத்திரத்தை தாக்கல் சொய்யவில்லை. என் மாமனார் பெயர் இடுபதுரை செட்டியார். அவரது தாத்தா கோவிந்தசாமி செட்டியார். கோவிந்த சாமி செட்டியாரின் வாரிசுகள் அவர்களுக்குள் 12.03.1973 பாக பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் செய்து கொண்டார்கள். அந்த பாகபிரிவினை தரங்கம்பாடி சார் பதிவ ஆவண எண் 305/1973 என்று பதிசெய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் என் மானாருக்கு D அட்டவணை 16 செண்ட் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சாட்சி அந்த வழக்கிற்கும் சம்பந்தம் இருக்கிறதா என்று கேட்கிறார். வழக்கு சொத்தின் சர்வே எண் 261. புல எண்ணில் தான் என் மாமனாருக்கு 16 செண்ட் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். ஆனால் அதிக பங்கு என் மாமனாருக்கு வந்துள்ளது. அதற்கு பதிலாக வீட்டை மற்ற பிள்ளைகள் எடுத்துக்கொண்டார்கள். 16 செண்ட் சொத்தின் நான்கெல்லைகள் விருத்தாச்சலம் நஞ்சைக்கு மேற்கு, நானாம்மபாள் பொன்னுசாமி நஞ்சைக்கு வடக்கு, பூசைக்குளம் பாய்கண்ணிக்கு கிழக்கு, மேற்படி குளத்திற்கு தெற்கு என்றுள்ளது என்றால் சரிதான். குளத்திற்கு தெற்கே உள்ளது தான் 16 செண்ட் என்றால் சரிதான். மொத்த விஸ்தீரணம்இந்த புல எண்ணில் 1.62 ஏக்கர். என் மாமனாருக்கு 16 செண்ட் தான் பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எங்களுக்குள்ஏற்பட்டதாகசொல்லும் பாகபிரிவினை எந்த தேதியில் எப்படி ஏற்படடது என்று என்னால் சொல்ல இயலாது. வாய்மொழியாக என் பாட்டிசொன்னது தான். என் அம்மாவும் சொன்னார். அந்த விபரத்தை வழக்கில் குறிப்பிட்விலைல என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக பாக பிரிவினை

ஏற்பட்டதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 12.03.1973 ல் ஏற்பட்ட பாக பிரிவினை குலத்திற்கு வடக்கே GH வீரப்ப செட்டியாருக்கும், குமரப்ப செட்டியாருக்கும் தலா 20 செண்ட் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. குலத்திற்கு வடக்கே உள்ள சொத்தில் எனக்கோ, என் கணவர், மாமனாருக்கோ எவ்வித உரிமையயும் இல்லை என்றால் சரியல்ல. குமரப்ப செட்டியார், வீரப்ப செட்டியார் எழுதிக் கொடுத்த ஆவணம் வழககில் தாக்கல் செய்யவில்லைஎன்றால் என்னிடம் தான் உள்ளது. அந்த விபரத்தை வழககில் சொல்லவிலலைஎன்றால் அதற்கான அவசியம் இல்லை. உண்மையிலேயே அவர்கள் ஆவணங்கள் எழுதி கொடுத்திருந்தால் வழக்கில் சொல்லி இருப்பேன் என்றால்சரியல்ல. குளத்திற்கு வடக்கே இருப்பது குமரப்ப செட்டியார், வீரப்ப செட்டியாருக்கு உரிமை என்றால் நாங்கள் அவருக்கு வாரிசுகள். குமரப்ப செட்டியார், வீரப்ப செட்டியார் ஆகியோர் பிரதிவாதியின் முன்னோர்களிடம் அவர்கள் இருந்த காலத்திலேயே சாகுபடிக்கு கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் முன்னோர்கள் குமரப்ப செட்டியார், வீரப்ப செட்டியார் அனுமதியுடன் சாகுபடி செய்து வந்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் சாகுபடிகான பகுதி தொகையை இடும்ப துரை குடும்பத்தினரிடம் செலுத்தி வந்தார்கள் என்றால் சரியல்ல. பிள்ளையார் கோவில், குலம் புலன் எண். 449 ல் அமைந்துள்ளது என்றால் தவறு. பிள்ளையார் கோவில் 1973 ல் இருந்தே உள்ளது என்றாலும் என் பணத்தை கொண்டு கட்டியதாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றாலும்சரியல்ல. அதற்கான ஆதராம் எங்கள் குடும்ப பாகரிவினை 1973 ஆவணத்தில் உள்ளது என்றால் சரியல்ல.குளம் காங்காலமாக பொது குளமாக பிரதிவாதிகளின் தெருவாசிகள் பயன் படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. அது என்னால் வெட்ட படி குளம் அல்ல என்றாலும் காலம் காலமாக பயன் படுத்தி வரும் குளம் என்றாலும் சரியல்ல. என் பகுதி உரிமையில் உள்ளது என்றாலும் சரியல்ல. அது 200 வருடங்களுக்கு முற்பட்ட பொது குளம் என்றால் சரியல்ல. அது குளம் அல்ல குட்டை.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**